DATE : 07.11.2023. P.W.1

<u>**அ.சா.1 லோகநாதன், த/பெ. சிவலிங்கம் என்பவர் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை:**</u>

நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக இருந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். எதிரி ஜெபகிருஸ்டோபர் அவரது தந்தை மூலமாக எனக்கு இருபது வருடங்களாக பழக்கம். எதிரியின் தந்தை தற்போது உயிருடன் தான் இருக்கிறார் அவரிடம் நான் பணம் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டதில்லை. எதிரி குப்புசாமி சித்த மருத்துவமனையில் இட்லி கடை வைத்துள்ளார். அந்த கடைக்கு எதிரியின் தந்தை தினமும் வந்து செல்வார் என்றால் அதனை நான் பார்த்ததில்லை. எதிரி என்னிடம் எந்த தேதியில் கடன் பெற்றார் என்றால் 12.12.2020 ஆம் தேதி பெற்றார்.

நான் அரசுப் பணியில் இருந்து ஜனவரி மாதம் 2023 ல் ஓய்வு பெற்றேன். நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிரி பணம் கேட்டபோது அவர் வீட்டில் இருந்த நபர்கள் யாரையேனும் சாட்சியாக அழைத்து வரும்படி கேட்டேனா என்றால் இல்லை. எதிரி மட்டுமல்லாமல் மேலும் பல நபர்களுக்கு அதிக வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள மூன்று வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. கடன் கொடுத்தது சம்மந்தமாக சிவில் நீதிமன்றத்தில் வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல எனது மனைவி கொடுத்த பணத்திற்கு அவர் வழக்கு போட்டுள்ளார். நான் எதிரிக்கு பணம் வழங்கிய அன்று எதிரி காசோலை அளித்தார் என்றால் சரியல்ல பாண்டு பத்திரம் மட்டும் எழுதிக் கொடுத்தார்.

நான் ஒன்றரை பைசா வட்டிக்கு இந்த பணத்தை எதிரிக்கு வழங்கினேன். நான் அரசு ஊழியராக இருந்தபோது வட்டிக்கு பணம் அளிக்கக்கூடாது என்ற விவரம் எனக்குத் தெரியும். நான் எதிரி எழுதிக் கொடுத்த கடனுறுதிச் சீட்டின் அசலினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே எதிரி கடனுறுதிச் சீட்டு ஏதும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி கடனுறுதிச் சீட்டு கொடுத்தார் என்பது வழக்கிற்காக என்னால் உருவாக்கப்பட்ட சங்கதி என்றால் சரியல்ல. மேற்படி கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் எதிரியிடம் பணத்தை திரும்ப கேட்டபோது எதிரி இரண்டு காசோலைகளை வழங்கியதாக கூறியது உண்மையல்ல என்றால் சரியல்ல.

எதிரியின் தந்தை தான் என்னிடம் பணம் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தார் என்றாலும் அதற்காக எதிரியின் காசோலையை என்னிடம் கொடுத்து வைத்திருந்தார் என்றாலும் அதனைப் பயன்படுத்தி எதிரியின் தந்தைக்கு உடல் நலம் பாதிப்பு ஏற்பட்டிருந்ததால் எதிரி மீது பொய்வழக்கு போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல. எதிரி நான் சொல்வது போல் என்னிடம் பணம் பெற்றிருந்தால் அந்த பணத்திற்கு ஒரு காசோலை

....2..

J JAYGANESH Digitally signed by J JAYGANESH

மட்டுமே வழங்கியிருப்பார் என்றாலும் இரண்டு காசோலைகளை எதிரி வழங்கினார் என வழக்கிற்காக பொய்யாக கூறியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரியின் தந்தை என்னிடம் பெற்ற கடனை திருப்பி கொடுத்துவிட்ட பிறகு அதற்கு ஈடாக கொடுத்த ஆவணங்களை பலமுறை கேட்டும் நான் திரும்ப கொடுக்காமல் அதனை பயன்படுத்தி எதிரி மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக கடனுறுதிச் சீட்டு தயார் செய்ததால் தான் அதன் அசலை போதிய காலஅவகாசம் வழங்கியும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> – இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.

J JAYGANESH Digitally signed by J JAYGANESH

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.